# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.180/பேரு/2023
நாள்: 17.7.2023

திருமதி E. சாந்தி,
கன்னியாகுமரி மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
புத்தளம் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம் .... எதிர்மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், மகாதானபுரம் அஞ்சல், பஞ்சலிங்கபுரம் எண் 4/52 என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி E. சாந்தி என்பவரது 03.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.06.2023 அன்று பெறப்பட்டு, 180/பேரு/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கன்னியாகுமரி மாவட்டம், மகாதானபுரம் அஞ்சல், பஞ்சலிங்கபுரம் எண் 4/52 என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி E. சாந்தி என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

" நான் அரசு ஒப்பந்ததாரராக இருக்கிறேன். தமிழக அரசு மார்ச் 2023–லிருந்து ஒப்பந்தப்புள்ளிகளை ஆன்லைன் மூலமாக மட்டுமே கொடுக்க வேண்டும் என்று அரசாணை வெளியிட்டு (G.O.Ms.No/93, Finance (Salaries) Department, Dated : 30.03.2023) உள்ளது. இந்த அரசாணையை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையில் 09.05.2023 அன்று கன்னியாகுமரி மாவட்ட அனைத்து பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களுக்கும் அனுப்பியுள்ளார்கள். நான், (1) சொத்தவிளை அரசு நடுநிலைப்பள்ளி முதல் கிழக்கு வடக்காசெல்லும் சாலையில் சிமெண்ட் தளம் அமைத்தல், (2) தெற்கு தேரிவிளை ஊர் கிணறு அருகில் செல்லும் சாலையில் அலங்கார தரைகற்கள் அமைத்தல், (3) தெங்கம்புதூர் முஸ்லீம் தெரு தெற்கு பக்கம் செல்லும் சாலையில் அலங்கார தரைகற்கள் அமைத்தல், (4) சேதுபதியூர் ஊர்ச்சாலையில் அலங்கார

தரைகற்கள் அமைத்தல் போன்ற நான்கு வேலைகளுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருந்தேன். 09.05.2023 அன்று பேரூராட்சி உதவி இயக்குநர் அவர்கள் சுற்றறிக்கையில் ஆன்லைன் மூலமாகத்தான் டெண்டர் நடத்தப்பட வேண்டும் என்றும், பணமும் ஆன்லைன் மூலமாகத்தான் செலுத்தப்பட வேண்டும் என்று கூறிய பிறகும் 18.05.2023ம் தேதி வரை ஆன்லைனில் பணம் கட்டுவதற்கான online payment option கொடுக்கப்படவில்லை. ஆகையால்தான் நாங்கள் பணத்தை வங்கி காசோலையாக செலுத்தினோம். சுற்றறிக்கை கொடுத்து சுமார் 10 நாட்களுக்கு பிறகுதான் டெண்டர் நடத்தப்பட்ட நிலையில் 10 நாட்கள் அவகாசம் இருந்த பின்னரும் ஏன் ஆன்லைனில் பணம் செலுத்துவதற்கான வசதி செய்து தரப்படவில்லை? தனக்கு வேண்டப்பட்டவர்களுக்கு டெண்டர்களை கொடுக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் ஒப்பந்தக்காரர்களிடம் கையூட்டு பெற்றுக்கொண்டு ஆப்லைன் மூலமாக நடத்தியும் உள்ளார். ஆன்லைன் மூலமாக முறைப்படி டெண்டர் கொடுத்த எனக்கு ஒப்பந்தம் வழங்கப்படவில்லை.

எனவே ஐயா அவர்கள் மேற்படி செயல் அலுவலர் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கும்படியும் முறைப்படி ஆன்லைன் மூலம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த எனக்கு ஒப்பந்தத்தை வழங்கும்படியும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.06.2023 நாளிட்டஅறிவிப்பு மூலம் புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்ட நிலையில் இம்முறைமன்ற 22.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மனுதாரர் திருமதி E. சாந்தி மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு நாகர்கோவில் முகாம் அலுவலகத்தில் 27.06.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**3) 27.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் சார்பாக அவரது கணவர் திரு. ஜி. இசக்கியப்பன் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

"கன்னியாகுமரி மாவட்டம், சொத்தவிளையில் சிமெண்ட் தளம் அமைத்தல், அலங்கார தரை கற்கள் அமைத்தல் போன்ற நான்கு பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்தேன். பேரூராட்சி உதவி இயக்குநரின் 09.05.2023 நாளிட்ட சுற்றறிக்கையில் ஆன்லைன் மூலமாகத்தான் டெண்டர் நடத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால், 18.05.2023ம் தேதி வரை ஆன்லைனில் பணம் கட்டுவதற்கான Online payment option கொடுக்கப்படவில்லை. எனவே, ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்வதற்கான தொகையை DD ஆக என்னால் செலுத்தப்பட்டது. ஆனால், யாரோ ஒருவருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கில் ஆன்லைன் மூலமாக முறைப்படி ஒப்பந்தப்புள்ளியை அளித்திருந்த எனக்கு ஒப்பந்தம் வழங்கவில்லை. மாறாக தனக்கு வேண்டியவர்களுக்கு ஒப்பந்தங்களை கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மறு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளனர். முறையாக ஒப்பந்தப்புள்ளி Online மூலம் கோரப்பட்டிருந்தால் மேற்கண்ட

பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி எனக்கு கிடைத்திருக்கும். ஆனால் நான் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டதால் எனக்கு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி கிடைக்கப்பெறவில்லை. விதிகளுக்கு மாறாக ஒப்பந்தப்புள்ளிகளை ரத்துசெய்த பேரூராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும், குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அளித்திருந்த எனக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்".

**4) புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலர் 27.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

கன்னியாகுமரி மாவட்டம், புத்தளம் இரண்டாம் நிலை பேரூராட்சியில் பொது நிதி திட்டம் 2022–2023–ன் கீழ் 5 வேலைகள் தேர்வு செய்யப்பட்டு அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் On line மூலம் பேரூராட்சியால் கோரப்பட்டது. மேற்கண்ட 5 பணிகளுக்கான டெண்டர் தொகை ஆன்லைன் மூலமாக மட்டும் பெறப்படவேண்டும் என்று பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் மேற்கண்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் ரத்து செய்யப்படுகிறது என்றும் அறிவிப்பு கடிதம் மூலம் மனுதாரருக்கு 22.05.2023 அன்று தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

தற்போது ஒத்திவைக்கப்பட்ட மேற்கண்ட 5 பணிகளுக்கும் 11.07.2023 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**5) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், புத்தளம் இரண்டாம் நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (மற்றும்) விதிகளில் இம்முறைமன்ற நடுவத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:-

பிரிவு 7 " The Ombudsman shall perform all or any of the following functions namely:-

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

புகார் மனுதாரர் தமது மனுவில் அரசாணை (நிலை) எண். 93, நிதித்(சம்பளங்கள்)துறை, நாள் 30.3.2023–ல் அனைத்து ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளும் online மூலமாகவே நடைபெற வேண்டுமென ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, புத்தளம் பேரூராட்சியில் 18.5.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி

தேர்ந்தெடுக்கும் நிகழ்வில் 18.5.2023 வரை online payment option கொடுக்கப்படாததால், தான் விண்ணப்பம் செய்திருந்த நான்கு பணிகளுக்கும் காசோலையாக பணம் செலுத்தினேன் என்று குறிப்பிட்டு பேரூராட்சியினர் கையூட்டு பெற்றுக்கொண்டு தனக்குவேண்டியவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் பேரூராட்சி செயல் அலுவலர் ஆப்லைன் மூலமாக ஒப்பந்தப்பணி நடத்தி முறைகேடு செய்துள்ளார் என்பதைச் சுட்டிக்காட்டி புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

அரசாணை (நிலை) எண்.93 நிதித்துறை, நாள் 30.3.2023 மற்றும் அரசாணை (நிலை) எண் 94 நிதித்துறை, நாள் 30.3.2023–ல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி 01.04.2023 முதல் அரசு மற்றும் அரசு பொது நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் அனைத்தும் இணையதளம் வழியே மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், இவ்வாறு இணையதள முறையை பின்பற்றாமல், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டால் அது விதிமுறைகளை மீறிய செயலாகக் கருதப்படும் என ஆணையிடப்பட்ட நிலையில் புத்தளம் இரண்டாம்நிலை பேரூராட்சியில் பொதுநிதி திட்டம் 2022–23–ன் கீழ் தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு புத்தளம் பேரூராட்சியால் 18.5.2023 அன்று இணையதளம் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டிருந்தாலும், ஒப்பந்தப்புள்ளிகளுக்கான வைப்புத்தொகை இணையதளம் மூலம் செலுத்த பேரூராட்சியால் வழிவகை செய்யப்படாமல், ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களின் வைப்புத்தொகையினை பேரூராட்சியில் நேரில் மற்றும் வங்கி வரைவோலையாக பெறப்பட்டிருப்பதிலிருந்து மேற்காணும் அரசாணைகளை பின்பற்றப்படாமல், விதிமுறைகள் மீறி புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலர் செயல்பட்டுள்ளார் என தெரிய வருகிறது. இவ்வாறு பொறுப்பற்ற முறையில் பேரூராட்சி அலுவலர்கள் செயல்பட்டுள்ளதால் 11.07.2023 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. இதனால் பேரூராட்சிக்கு வீண் காலவிரயமும் மற்றும் நிதியிழப்பும் ஏற்பட்டுள்ளதை கண்கூடாக காண முடிகிறது. இணையதளம் மூலம் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படாமல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்படவேண்டிய வகையில் பொறுப்பற்ற மற்றும் கடமை தவறி செயல்பட்டுள்ள புத்தளம் இரண்டாம் நிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறை ரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

The Executive officer of the Town Panchayat who was in office during the period of this occurrence deserves to be charge sheeted for his conduct in the tender handling matter raised by the petitioner. The wilful attempts to prolong the tender floating process to avoid and avert the petitioner are seen nakedly with a motive to promote the interest of his favorite bidders as alleged by the petitioner on the part of the Executive Officer. The Director of Town Panchayats is directed to launch disciplinary action against the Executive

Officer, concerned who had misused his official status to tamper with the tender process and procedure with an ulterior motive to the detriment of the petitioner.

An action taken report may be sent to this forum in the next 45 days.

2023–ஆம் ஆண்டு, ஜூலை 17 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்./–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி E. சாந்தி
மகாதானபுரம் அஞ்சல்,
எண் 4/52 பஞ்சலிங்கபுரம்,
கன்னியாகுமரி மாவட்டம்

2) செயல் அலுவலர்,
புத்தளம் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர்
(Nodal Officer) (பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.